# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 17.12.2021 | supeedsam.com | supeedsam@gmail.com









# சாணக்கியனுடனான விவாதத்துக்கு நாள் குறித்த நசீர் அகமட்



(நமது நிருபர்)

நசீர் அஹமட் உடான பகிரங்க விவாதத்திற்கு தான் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்திருந்த நிலையில், விவாதத்துக்கான நாளை தீர்மானித்துள்ளார் நசீர் அஹமட்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனை பகிரங்க விவாதத்திற்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் கடந்த சில தினங்களுககு முன்னர் அழைப்பு விடுத்திருந்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கடந்த 10ஆம் திகதி நடத்தப்பட்ட விவாதத்தின் போது இரா.சாணக்கியன் வெளியிட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பகிரங்க விவாதத்திற்கான அழைப்பை விடுப்பதாக நசீர் அஹமட் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

02 ஆம் பக்கத்தில்...

## ௨0௨௨ ஆம் ஆண்டு ஜெனிவாவில் இலங்கைக்கு நெருக்கடி

(காந்தவன்)

2022ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கைக்குக் கடும் நெருக்கடி ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



## ஒமிக்ரான் தோற்றிய நால்வர் சிக்கினர்

ஒமிக்ரான் பிறழ்வு மாறுபாட்டினால் பாதிக்கப்பட்ட நான்கு பேர் இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக ஒருவர் கண்டறியப்பட்ட நிலையில் நேற்று (16) மேலும் மூன்று பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக

02 ஆம் பக்கத்தில்...

## சீனத் தூதுவருக்கு பனை மரம் காட்டிய டக்ளஸ்



(ஜுட்)

வடக்கிற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள சீன தூதுவர் யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்கு விஜயத்தினை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று காலை 8 மணியளவில் அரியாலை கடலட்

02 ஆம் பக்கத்தில்...

## காணாமல்போயிருந்த அருட்தந்தை ஜோன் ஹேர்பட் திருவுருவச்சிலை மட்டக்களப்பில் திறந்துவைப்பு



(மட்டு சுபீட்சம் நிருபர்)

தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்காக குரல்கொடுத்த நிலையில் காணாமல்போயிருந்த அருட்தந்தை ஜோன் ஹேர்பட் அவர்களின் திருவுருவச்சிலை நேற்று மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்காக குரல்கொடுத்த நிலையில் காணாமல் போயிருந்த

02 ஆம் பக்கத்தில்...

## 15 வருடங்களின் பின்னர் தமிழ் அரசியல் கைதி ஒருவர் விடுதலை

15 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியொருவரை நிரபராதி என கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது.

மானிப்பாய் வீதி, தாவடியை சேர்ந்த தேவராசா சிவபாலன் (வயது 45)

02 ஆம் பக்கத்தில்...

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்கின் தீர்ப்பு தவணையிடப்பட்டது



தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிக்கட்ட போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல்போனவர்களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு, அடுத்த வருடத்துக்கு தவணையிடப்பட்டு உள்ளதாக, சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் கிழக்கு மாகாண சுகாதார உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

கிழக்கு மாகாண சுகாதார தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறையினை சேர்ந்தவர்கள் சுகவீன விடுமுறைப்போராட்டத்தினை முன்னெடுத்துள்ளதுடன் மட்டக்களப்பில் பாரிய கவன ஈர்ப்பு போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எட்டு கோரிக்கைகளை முன்வைத்து 16 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்த கிழக்கு மாகாண சுகாதார தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தினால்

02 ஆம் பக்கத்தில்...

## மூன்று அமைப்புகள் தொடர்பில் பேஸ்புக் நிறுவனம் எடுத்த நடவடிக்கை

இலங்கையை தளமாகக் கொண்ட மூன்று அமைப்புகளுக்கான ஆதரவு பதிவுகளை இடுவதற்கு இவ்வருடமும் பேஸ்புக் நிறுவனம் தடை விதித்துள்ளது.

இதன்படி, தமிழீழ விடுதலைப் புலிகள், பொதுபல சேனா மற்றும் அந்த அமைப்பைச்

02 ஆம் பக்கத்தில்...












## வடக்கில் அதிகரித்த இராணுவ பிரசன்னம்

### உடன் வெளியேற்றுமாறு விக்கி வலியுறுத்து

(யாழ்.கீதன்)



வட மாகாணத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் குறைக்கப்பட வேண்டும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...




# வீடற்ற நிலையில் தாய்நாட்டில் விடுதியில் வாழ்வது போன்ற யுகத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்

(வாஸ் கூஞ்ஞ)

வீடற்ற நிலையில் தாய்நாட்டில் விடுதியில் வாழ்வது போன்ற யுகத்தை எதிர்வரும் ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் கௌரவ பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிட்டார்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் எண்ணூறு பேருக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் மற்றும் களனிவெலி புகையிரத பாதையை விரிவுபடுத்தும் நடவடிக்கையின் போது அகற்றப்பட்ட மக்கள் உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட 528 வீடுகளை கொண்ட கொலொம்தொட சரசவி உயன தொடர் மாடிக் குடியிருப்பை திறந்துவைத்து புதன்கிழமை (15) உரையாற்றுகையிலேயே கௌரவ பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு 05 பொல்ஹேன்கொட காலிங்க மாவத்தையில் அமைந்துள்ள இந்த தொடர் மாடிக் குடியிருப்பு நிர்மாணத்தின் போது வீடுகளை இழந்த கொலம்பகே மாவத்தையை சேர்ந்த குடும்பங்களுக்காக இந்த குடியிருப்பு தொகுதியில் வீடுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு படுக்கையறைகள் உள்ளடங்களாக சகல வசதிகளையும் கொண்ட இந்த 528 வீடுகளை நிர்மாணிப்பதற்கான வரியில்லாச் செலவு சுமார் 1900 மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்பில் மாகா பொறியியலாளர் தனியார் நிறுவனம் இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை பொறுப்பேற்றிருந்தது.

வீட்டுத் திட்டத்தை பொதுமக்களுக்கு கையளித்து கௌரவ பிரதமர் அதன் நினைவு பலகையை திறந்து வைத்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரர் உட்பட முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



இதன்போது பயனாளர்கள் ஐவருக்கு வீட்டின் திறப்புகள் கௌரவ பிரதமரினால் கையளிக்கப்பட்டன. மேற்படி நிகழ்வில் கௌரவ பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு;

2014ஆம் ஆண்டிலேயே நாம் இந்த வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்தோம். இந்த வீட்டுத் தொகுதி ஒரு தனித்துவமான வீட்டுத் திட்டமாகும். மூன்று கோபுரங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வீடமைப்புத் தொகுதியின் ஒன்று கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்கப்படவுள்ளது. அதை விடுதியாக பயன்படுத்துவதற்கு இந்த வீடமைப்பு திட்டத்திற்காக காணிகளை வழங்கிய மக்களுக்கும் களனிவெலி புகையிரத பாதை விஸ்தரிப்பின் போது வெளியேற்றப்பட்ட மக்களுக்கும் இந்த வீட்டுத் திட்டத்தில் வீடுகள் கிடைக்கப்பெறும். அவர்கள் சட்டவிரோதமாக வாழ்ந்தாலும் அவர்களுக்கு வீடு வழங்க விரும்பினோம். அதனால் அவர்களுக்கும் இங்கு இலவச வீடு கிடைக்கின்றது.

அந்த குடும்பங்களின் பிள்ளைகள் வாழ்க்கையில் ஒரு புதிய நம்பிக்கையை பெற முடிகிறது. அவர்களுக்கு வீட்டு உரிமையும், சொந்த முகவரியும் கிடைத்திருக்கிறது.

வீடற்ற மக்களுக்கு அவர்களின் தாயகத்தின் உண்மையான உரிமைகளை வழங்குவதே எமது நோக்கமாகும். நாங்கள் அமுல்படுத்தும் வீட்டுத் திட்டங்களில் சிங்களவர்இ தமிழ்இ முஸ்லிம் என்ற இனப் பாகுபாடு கிடையாது. மேலும், கட்சி பிளவு இல்லை.

வீடற்றவர்கள் தன் சொந்த ஊரில் விடுதியில் குடியிருப்பவனைப் போன்றவர்கள் என்பதை நினைவில் வையுங்கள். இன்னும் சில வருடங்களில் அந்த சகாப்தம் முடிவுக்கு வர வேண்டும்.ஒரு கொள்கையுடன் நாம் இந்த வீட்டுத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இது அரசியல் உள்நோக்கம் கொண்ட திட்டம் அல்ல. கடந்த காலங்களில் வீடுகளை கட்டுவதை விட வீடுகளை கட்டுகிறோம் என்று கூறுவதற்கு பணத்தை செலவு செய்த அரசாங்கங்கள் இருந்தன. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் வீட்டுத் திட்டங்களுக்கான விளம்பரச் செலவு கோடிக்கணக்கான ரூபாவாகும். அந்த பணத்தில் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வீடுகளை கட்டியிருக்கலாம்.

எமது நாட்டு மக்களுக்கு அரச வீடமைப்பு திட்டங்களில் நல்ல அனுபவம் உள்ளது. எனக்கும் நல்ல அனுபவம் உண்டு. நிழல் அமைச்சர் என்ற வகையில் நானும் எதிர்க்கட்சியில் அமர்ந்து பாராளுமன்றத்தில் வீட்டுத்திட்டங்கள் குறித்து பலமுறை பேசியுள்ளேன்.

அந்த நாட்களில்இ ஜயவர்தனபுரவை சுற்றி சதுப்பு நிலங்களை நிரப்பி வீடுகளை நிர்மாணிக்கும் போதுஇ இவ்வாறு வீடுகளை நிர்மாணித்தால் ஒருநாள் பாராளுமன்றமும் மூழ்கிப்போகும் என நான் நாடாளுமன்றத்தில் கூறியது எனக்கு நினைவிருக்கிறது.

நம் நாடு குறித்து எண்ணியே நாம் வீடுகளை கட்டுகிறோம். வீட்டுத்திட்டத்தை மக்கள் சார்பான திட்டமாக செயல்படுத்தி வருகிறோம்.மேலும் நாம் கொடுக்கும் வீட்டில் குடும்பமாக வாழ்வதற்கு ஏற்ற சூழல் அமைய வேண்டும். அந்த வீட்டில் சுதந்திரமாக வாழ வேண்டும்.

## 2022 ஆம் ஆண்டு ஜெனிவாவில் இலங்கைக்கு நெருக்கடி

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் மார்ச்சில் ஆரம்பமாகின்றது. இலங்கை தொடர்பில் இம்முறை கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றே எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சர்வதேசத்துடன் நல்லுறவைப் பேணவில்லை. மனித உரிமைகளை மீறும் 45 நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது. 2022ஆம் ஆண்டு என்பது தீர்க்கமான வருடமாக அமையும். பல மாற்றங்கள் இடம்பெறும். ஆட்சி மாற்றம்கூட ஏற்படும் என குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கில் அதிகரித்த இராணுவ பிரசன்னம் உடன் வெளியேற்றுமாறு

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே சி.வி.விக்னேஸ்வரன் இதனைக் கூறியுள்ளார்.

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் இராணுவத்தின் பங்கேற்புடன் நீர், சுற்றாடல், மற்றும் விவசாய பாதுகாப்பு அமைப்பின் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு விக்னேஸ்வரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், இராணுவத்தின் பிரசன்னம் குறித்து அவர் தமது கரிசனையினை வெளிப்படுத்தியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் ஆகியுள்ள நிலையில், வடக்கில் பாரியளவில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளமையினால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவருவதாகவும், விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே வடக்கில் தங்கியுள்ள மேலதிக இராணுவத்தினரை உடன் வெளியேற்றுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இராணுவத் தரப்பின் பங்கேற்புடன் குறித்த கலந்துரையாடல் இடம்பெறுகின்மையினால் தம்மால் அதில் கலந்து கொள்ள முடியாது எனவும் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.




## மூன்று அமைப்புகள் தொடர்பில் பேஸ்புக்

சேர்ந்த கலகொட அத்தே ஞானசார தேரர்,மற்றும் 'சிங்ஹலே' ஆகிய அமைப்புக்களுக்கான ஆதரவான பதிவுகளை இடுவதற்கே அந்நிறுவனம் தடை விதித்துள்ளது.

பொதுபல சேனா மற்றும் 'சிங்ஹலே' ஆகிய அமைப்புகள் சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு மத்தியில் வெறுப்புப் பேச்சுகளை கொண்டு செல்லுதல் மற்றும் சமூகங்களுக்கு இடையில் பிரச்சினை கருத்துக்களை பகிர்தல் என்றதன் அடிப்படையில் பேஸ்புக் நிறுவனம் தடை விதித்துள்ளது.

## மட்டக்களப்பில் கிழக்கு மாகாண சுகாதார

இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்னால் ஆரம்பமான ஆர்ப்பாட்டம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை வரை சென்று அங்கிருந்து காந்தி பூங்கா வரையில் பேரணி நடைபெற்றது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதுக்கள், தொழில்நுட்ப ஆய்வுகூட பரிசோதகர்கள் உட்பட சுகாதாரத்துறை சார்ந்த பலர் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்கின்

இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தால், நேற்று அறிவிக்கப்படவிருந்தது.

இந்நிலையில், மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இறுதிப் போரின் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவுக்கான தீர்ப்பு, இன்று (நேற்று) வழங்கப்படவிருந்தது எனவும் இந்த வழக்கு தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று, அந்த நீதிமன்றம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது எனவும் அந்த அறிக்கை மீதான வவுனியா மேல் நீதிமன்றின் தீர்ப்பு, இன்றுவழங்கப்படுவதாக இருந்தது எனவும் கூறினார். எனினும், அந்தத் தீர்ப்பு இன்னும் தயாரித்து முடிக்கப்படவில்லை என்று வவுனியா மேல் நீதிமன்றம், இன்று தமக்கு அறிவித்துள்ளது எனவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் வருடம் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என்ற விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், அவர் கூறினார்.

## 15 வருடங்களின் பின்னர் தமிழ் அரசியல் கைதி

என்பவரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஆயுதங்களை கொழும்புக்கு கடத்தி வந்தார் எனும் குற்றச்சாட்டில், வத்தளை பகுதியில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதன் பின் 2 வருட கால விசாரணைகளின் பின்னர், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கொழும்பு நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளுக்காக கடந்த 15 ஆண்டு காலமாக நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார். இந்நிலையில் கடந்த 14ஆம் திகதி அவருக்கு எதிரான வழக்கில் அவரை நிரபராதி என கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை வழக்கிலிருந்து விடுதலை செய்தது.

இதேவேளை அவரது மகளுக்கு ஒரு வயதும் நிரம்பாத நிலையில், அவர் கைது செய்யப்பட்டு , தற்போது அவர் விடுவிக்கப்பட்டதும் , தனது மகளை 15 வருடங்களின் பின் கண்டு நெகிழ்ச்சியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காணாமல்போயிருந்த அருட்தந்தை ஜோன்

அருட்தந்தை ஜோன் ஹேர்பட் அவர்களின் திருவுருவச்சிலை இன்று மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது.

ஊரணி சந்தியில் வாவிக்கரை பூங்காவுக்கு அருகில் இந்த சிலை இன்று காலை திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை ஜேசுசபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த சிலையின் திறப்பு விழாவில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

இந்த திறப்பு விழாவில் இலங்கை ஜேசுசபையின் தலைவர் உட்பட அருட்தந்தையர்கள்,ஜேசுசபை துறவிகள் என பலர் கலந்து கொண்டனர்.

1948ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து மட்டக்களப்பு வருகைதந்த அவர் புனித மைக்கேல் கல்லூரி ஆசிரியராகவும் தொழிநுட்ப பயிற்சி கல்லூரியின் ஸ்தாபகராகவும் செயற்பட்டதுடன் மட்டக்களப்பின் விளையாட்டுத்துறைக்கும் அரும்பங்காற்றியுள்ளார்.

அத்துடன் 1990ஆம் ஆண்டுகாலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற பல்வேறு கடத்தல்கள், படுகொலைகள்,இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக சர்வதேச ரீதியாக குரல் கொடுத்தும் வந்துள்ளார்.

இந்த நிலையில் 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஏறாவூர் பகுதி ஊடாக பயணித்துக்கொண்டிருந்தபோது அருட்தந்தை அவர்கள் காணாமல்போயிருந்தார்.

## சீனத் தூதுவருக்கு பனை மரம் காட்டிய டக்ளஸ்

டைப் பண்ணைக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தார்.

இதன் போது கடலட்டை பண்ணையில் ஒரு சுவாரஸ்யமான சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.

அங்கு நின்ற பனை மரத்தினை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காண்பித்து, இதுதான் பல்மேறா (பனை மரம்) என தெரிவித்த போது சீன தூதுவர் பனைமரம் தொடர்பில் வினவினார்.

இதில் ரொடி (கள்) கிடைக்கும். மதுவகை என சைகை மூலம் காண்பித்து, இது உடம்புக்கு கேடு விளைவிக்காது என விளங்கப்படுத்திய போது, சீனத் தூதுவர் அதற்கு ஹா ஹா என சிரித்த சம்பவம் இடம்பெற்றது.

## ஒமிக்ரான் தொற்றிய நால்வர் சிக்கினர்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார். எதிர்பார்த்தபடி ஒமிக்ரான் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆகையால், உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள் இன்றைய நிலவரப்படி, தங்கள் ஆய்வகத்திலிருந்து நால்வருக்கு ஒமிக்ரான் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் டுவீட் செய்துள்ளார்.

முன்னெப்போதும் இல்லாத அளவில் ஒமிக்ரான் உலகம் முழுவதும் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) எச்சரித்திருந்தது. 77 நாடுகளில் பெரிதும் மாற்றமடைந்த மாறுபாட்டின் வழக்குகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த தொற்று, இன்னும் பலரிடம் இருக்கலாமென உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், எச்சரித்திருந்தார். அத்துடன், மாறுபாட்டைச் சமாளிக்க போதுமான அளவு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென என்பது தொடர்பில் கவலைப்படுவதாகக் கூறினார்.

## சாணக்கியனுடனான விவாதத்துக்கு நாள்

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானுடன் சேர்ந்து காணி பிரச்சினை தொடர்பில் நாடகம் ஆடுகின்றனர் என இரா.சாணக்கியன் தெரிவித்த கருத்து தொடர்பில் பகிரங்கமாக விவாதிக்க வேண்டும் என தாம் விரும்புவதாக நசீர் அஹமட் கூறியிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில், மாவட்ட முஸ்லிம்களுக்கு காணி தொடர்பில் இழைக்கப்பட்ட அநீதிகளை நாட்டு மக்களுக்கு வெளிக்கொணர வேண்டிய தேவை தமக்குள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் அதற்கு பதில்வழங்கிய இரா.சாணக்கியன், நசீர் அஹமட்டினை கண்டால் கூட்டி வாருங்கள், அவரை விவாதத்திற்கு அழைத்து வாருங்கள் என குறிப்பிட்டார்.

இந்நிலையில்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனைப் பகிரங்க விவாதத்திற்கு அழைத்திருந்தமை தொடர்பில், அரச தொலைக்காட்சி ஒன்று குறித்த விவாதத்திற்கு திகதியிட்டு அதனை உறுதிப்படுத்துமாறு அனுப்பிய செய்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் அதனை உறுதி செய்து பதிலனுப்பியுள்ளார்.

விவாதத்திற்கு உங்களால் உத்தேசிக்கப்பட்ட 29ஆம் திகதியில் என்னால் சமூகம் கொடுக்க முடியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் அந்த ஊடக நிறுவனத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

# கிழக்கு மாகாண பிரஜைகள் வரவு செலவு திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு

## கிழக்கு ஆளுனர், யுனிசெப் பிரதிநிதி பங்கேற்பு

**(ஹஸ்பர் ஏ ஹலீம், சமிரா)**

கிழக்கு மாகாண பிரஜைகள் வரவு செலவு திட்டம் உத்தியோகபூர்வமாக வெளியீட்டு வைக்கும் நிகழ்வு (15) திருகோணமலை ஜேகப் பீச் ஹோட்டலில் கிழக்கு மாகாண ஆளுனர் அநுராதா யஹம்பத் தலைமையில் இடம் பெற்றது 2021ம் ஆண்டு கிழக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட வரவு செலவு திட்டமானது மக்களது கருத்துக்களை உள்வாங்கி தயாரிக்கப்பட்டதுடன் குறித்த விடயங்கள் மாகாணத்தில் என்ன அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டமை தொடர்பான முன்வைப்புக்கள் இதன் போது தெளிவுபடுத்தப்பட்டது .







கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்தப்படும் திட்டங்களானது மக்கள் பங்கேற்புடன் செயற்படுத்தம் போது அது மேலும் செயற் திறனாக அமையும் என்பது தொடர்பிலும் எதிர்வரும் காலங்களில் மாகாணத்தின் வளர்ச்சிக்கு பாரிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது இலங்கையில் ஏனைய மாகாண சபைகளை விடவும் மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்த்து இவ்வாறான பட்ஜட்டினை திறம்பட நடைமுறைப்படுத்துவதில் கிழக்கு மாகாண சபை ஒரு முண்னுதாரனமாகும் .

யுனிசெப் மற்றும் ஐரோப்பிய யுனியன் இணைந்து இதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி Christian skoog அவர்களின் முன்னிலையில் கிழக்கு மாகாண ஆளுனர் அநுராதா யஹம்பத் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

யுனிசெப் அமைப்பின் சமூகக் கொள்கைக்கான பிரதானி Louise moreira Daniels சிறுவர் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களை இதன் போது தெளிவுபடுத்தினார்.

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.எம். எல்.பண்டாரநாயக்க உள்ளிட்ட திணைக்களத் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மருதமுனை ஹியூமன் லின்க் நிறுவனத்தின் புதிய வகுப்பறை கட்டடம் திறந்துவைப்பு




**(ஏ.எல்.எம்.ஷினாஸ், றாசிக் நபாயிஸ்)**

மருதமுனை ஹியூமன் லின்க் விசேட தேவையுடையோருக்கான வளப்படுத்தல் மத்திய நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா புதன்கிழமை (13) நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ. கமறுத்தீன் தலைமையில் மருதமுனையில் நடைபெற்றது.

2007 ஆம் ஆண்டில் மருதமுனையில் ஆரம்பிக்கப்பட்ட விசேட தேவையுடையோருக்கான வளப்படுத்தல் மத்திய நிலையம் மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது. இதில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த வகுப்பறை கட்டடம் சகல வசதிகளையும் கொண்டதாக 15 மில்லியன் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது இரண்டு மாடிகளைக் கொண்ட இந்த வகுப்பறை கட்டடத்திற்கான அனுசரணையை குவைத் நாட்டின் சகோதரி ஆயிஷா யூசுப் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். ரஹ்மா சர்வதேச சங்கம், மேர்ஸி லங்கா நிறுவனம் என்பனவற்றின் ஒத்துழைப்போடு கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழா நிகழ்வில் இந்திய உபகண்ட காரியாலய தலைமை அதிகாரியும் சர்வதேச ரஹ்மா அமைப்பின் பிரதிநிதியுமான அஷ்செய்க் மொஹமட் அல்கஸ்ஸார், மேர்ஸி லங்கா நிறுவனத்தின் இலங்கை நாட்டுக்கான பணிப்பாளர் உஸ்தாத், அப்துல்லாஹ் முனீர், மேர்ஸி லங்கா நிறுவனத்தின் சட்ட ஆலோசகரும் திட்ட முகாமையாளருமான அஷ்செய்க் .என்.எம்.அப்துல் முஜீப், திட்டமிடல் முகாமையாளர் அஷ்செய்க் ஹஸன் ஸியாத், திட்டமிடல் பணிப்பாளர் அஷ்செய்க் .எம்.ஆர்.எம்.முனாஸ், கல்விப் பிரிவு பணிப்பாளர் டொக்டர் ஏ. பௌசுல் ரஹ்மான் உட்பட ஹியூமன் லின்ங் நிறுவனத்தின் பணிப்பாளர்சபை உறுப்பினர்கள், பொதுமக்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஆலையடிவேம்பு சின்னமுகத்துவார ஆற்றுமுகப்பிரதேசம் அகழ்ந்துவிடப்பட்டது

**(வி.சுகிர்தகுமார்)**

அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு அக்கரைப்பற்று தெற்கு பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தை தடுக்கும் முகமாகவும் விவசாய நிலங்கள் மற்றும் தாழ்நிலப்பிரதேங்களில் சூழ்ந்துள்ள வெள்ளநீரை வெளியேற்றும் பொருட்டும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சின்னமுகத்துவாரம் ஆற்றுமுகப்பிரதேசம் அகழ்ந்துவிடப்பட்டது.



பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் கிராம உத்தியோகத்தர் பு.கிருசாந்தன் மேற்பார்வையில் திருக்கோவில் பிரதேச சபையின் கனரக வாகனத்தின்; உதவியோடு சின்னமுகத்துவாரம் ஆற்றுமுகப்பிரதேசம் அகழ்ந்துவிடும் பணி முன்னெடுக்கப்பட்டது.

அக்கரைப்பற்று தெற்கு ஆலையடிவேம்பு பிரதேசங்களில் வெள்ள அனர்த்த நிலை ஏற்படும் சந்தர்ப்பம் உள்ளதாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவும் களவிஜயத்தின் போது வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதை அறிந்து கொண்டதை கருத்தில் கொண்டுமே இத்தீர்மானம் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் குறித்த விடயம் தொடர்பில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் துறைசார்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் பிரதேச சபை தவிசாளர் ஆகியோருடன் தொலைபேசியினூடாக மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னரே முடிவுகள் எட்டப்பட்டது.

இதே நேரம் அம்பாரை மாவட்டத்தில் தொடர்ந்தும் பலத்த மழை பெய்து வருவதுடன் வீதிகள் குடியிருப்புக்கள் என பல இடங்களும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளமையும் இந்நிலை நீடித்தால் வெள்ள அனர்த்தம் ஏற்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் சமூகநல வைத்தியர்களுக்கு 04 நாள் பயிற்சிப்பட்டறை






**(பைஷல் இஸ்மாயில் )**

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் பாரம்பரிய வைத்தியத்துறைக்கான தேசிய நிறுவனம் இணைந்து நாடாத்தும் தாய் சேய் போசனை நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள சமூகநல மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான 04 நாள் பயிற்சிப்பட்டறையின் இருதி நாள் நிகழ்வு நேற்று புதன்கிழமை (16) திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.

மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் மேடம் அவர்களின் ஆலோசனைக்கும், அறிவுருத்தல்களுக்கும் அமைவாக இடம்பெரும் இந்தப்பயிற்சி பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் பாராம்பரிய வைத்தியத்துறைக்கான தேசிய நிறுவனத்தின் விரிவுரையாளர் வைத்தியர் வி.ஜெகதீஸ்வரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் மேற்பார்வை சமூகநல மருத்துவ உத்தியோகத்தர் வைத்தியர் எஸ்.சிவச்செல்வன், வைத்தியர் எஸ்.சதீஸ் ஆகியோர் கலந்துகொண்டு இப் பயிற்சி பட்டறையை ஆரம்பித்து வைத்தனர்.

இறுதிநாள் நிகழ்வின் வளவாளராக மட்டக்களப்பு பிராந்தி ஆயுள்வேத இணைப்பாரும் புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் (திருமதி) ஜெயலட்சுமி பாஸ்க்கரன் கலந்துகொண்டு குறிப்பிட்ட விடயம் தொடர்பில் விரிவுரையை வழங்கி வைத்தார்.

இந்த பயிற்சிப்பட்டறையில் கிழக்கு மாகாணத்திலுள்ள சமூகநல மருத்துவ உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பல நன்மைகளை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கௌரவம் பெறுகிறது இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்




**(நூருல் ஹுதா உமர் )**

யு.ஐ. கிரீன்மெட்ரிக் தரவரிசையில், இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் தென் கிழக்குப் பல்கலைக்கழகம் நான்காவதும், உலகளாவிய ரீதியில் 318 வது நிலையையும் பெற்றுள்ளது.

இலங்கையில் உள்ள ஏழு (07) பல்கலைக்கழகங்கள் இந்த தரப்படுத்தலில் பங்குபற்றிய போதும், தென்கிழக்கு பல்கலைக்கழகம் 657 புள்ளிகளைப் பெற்றிருக்கின்றது. எனினும் இலங்கையில் முதுமையான பல்கலைக்கழங்களான ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தலா ஐந்தாம், ஆறாம், ஏழாம் இடங்களினை பெற்றுள்ளன.

தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தராக பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கடமையேற்று குறுகிய காலத்தில் இளமையான (25 ஆண்டுகள் கடந்துள்ள) 06 பீடங்களை கொண்ட தென்கிழக்கு பல்கலைக்கழகம் 04ம் நிலை பெற்றுள்ளமையானது இப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி மற்றும், அபிவிருத்தி மேன்மைப்படுத்தப்பட்டிருப்பது பாராட்டத்தக்க ஒரு விடயமாகும்.


வெகுவிரைவில்
கோலாகலமாக
திறக்கப்பட உள்ள
Asiatischer Lebensmittelladen
importas
200+பார்க்கிங் வசதியுடன்
HIGHWAY யிலிருந்து 700M தூரம் மட்டுமே!
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Kings
TRS
Niru
Aachi
LEELA
Maggi
Suryaa
LION
PG tips
Maliban
Rubicon
Double Horse
ELAKKIA
Tilda
OKF


Offer From
18.12.2021 to 15.01.2022
(Unsere Öffnungszeiten während der Feiertage finden Sie auf der Rückseite)
மாபெரும்
அதிரடி மலிவு விற்பனை
importas Cash & Carry
Bern & Zürich
Merry Christmas
& HAPPY NEW YEAR
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புது வருட
தை திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்
Free* ab 300 CHF
CHF 300 க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
CHF 39.90 பெறுமதியான
Rice Cooker இலவசம்.
18.12.2021 தொடக்கம் 31.12.2021 வரையே
அதிரடி விலையில்
V Box கொள்வனவு
செய்பவர்களுக்கு
50% விலைக்கழிவு.
CHF 119.-
CHF 60.-
Nur solange Vorrat reicht.
Einkaufswert ab 300 Fr. Subash Rice Cooker free.

# சந்திவெளி பழம்பிள்ளையார் நாககன்னி அம்மன் திருக்கோவிலில் செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர்களுக்கான பயிற்சி நெறி நிறைவு






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு சந்திவெளி ஏரிக்கரை வீதியில் அமைந்துள்ள திருவருள் மிகு பழம்பிள்ளையார் நாககன்னி அம்மன் திருக்கோவிலில் நடத்திய செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர்களுக்கான பயிற்சி நெறி இறுதி நாள் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

தென்கயிலை ஆதின சிவத்தமிழம் குருபீடம் ஏற்பாடு செய்திருந்த இப்பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வின்போது பயிற்சி பெற்ற செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர்களுக்கான சான்றிதழ்கள் இதன்போது வழங்கி வைக்கப் பட்டது.

இப்பயிற்சி நெறியினை திருவருட்செல்வர் உயிரொளி சிவம் சிவத்திரு பிரதாபனார் ஐயா அவர்கள் சிறப்பாக வழங்கியிருந்தார்.

இந்நிகழ்விற்கு தென்கயிலை ஆதீனம், செல்வச்சந்நிதியான் ஆச்சிரமம், உயர் திரு மறவன்புலவு சச்சிதானந்தன், சந்திவெளி பழம்பிள்ளையார் நாககன்னி அம்மன் திருக்கோவில், தமிழர் பாரம்பரிய வழிபாட்டு அமைப்பு, சந்திவெளி அகத்தியர் அறநெறி, சிவனருள் ஒன்றியம், அகில இலங்கை சைவத்தமிழ் மன்றம் போன்ற அமைப்புக்களும் சந்திவெளி கண்ணகி அம்மன் ஆலய பிரதம குருவும் ஒத்தாசை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பராமரிப்பதற்காக பாதுகாப்பு நிலையம்; கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை




(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களை பராமரிப்பதற்காக பாதுகாப்பு நிலையம் ஒன்று இன்மையால் பாதிக்கப்படும் பெண்கள் சிரமப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு இதற்கான கோரிக்கையை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் திடம் விடுத்துள்ளது.

நேற்று ஜேக்கப் பார்க் விடுதியில் நடந்த பயிற்சி முடித்த வர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியில் மகஜர் மூலம்இக் கோரிக்கையை இணைவலையினர் விடுத்துள்ளனர்

மனித உரிமைகள் மற்றும் தையல் பயிற்சி களை முடித்தவர்களுக்கு சான்றிதழ் கள் இங்கு வழங்கப்பட்டது.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக ஆளுநர் கலந்து கொண்டிருந்தார். இவரிடம் குறித்த கோரிக்கை மனு வலையமைப்பு பணிப்பாளர் அவர்களால் கையளிக்கப்பட்டது.

கிராம மட்டங்களிலும் பல இடங்களிலும் பெண்கள் வன்முறைக்குள்ளாகி பாதிக்கப்படுகின்றனர். அவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் பாதுகாப்பாக விசாரணை க்காலங்களில் வைத்து பராமரிக்க safe house என்றழைக்கப்படும் பாதுகாப்பு நிலையம் அவசியமாகும்.

திருகோணமலை யில் அந்த வசதி இல்லாமல் உள்ளது. எனவே அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டும். எனவும் அந்த மகஜரில் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

## தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பொன்விழா நிகழ்வு




(நூருள் ஹுதா உமர், றாஸிக் நபாயிஸ், எம்.என்.எம். அப்ராஸ்)

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பொன்விழா நிகழ்வுகளை ஒட்டியதாக அம்பாறை மாவட்ட கிளை ஏற்பாடு செய்த பொன்விழா நிகழ்வுகள் மாவட்ட முகாமையாளர் ஏ. மசூரின் தலைமையில் கல்முனையில் அமைந்துள்ள மாவட்ட காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை (16) இடம்பெற்றது.

தேசிய கொடி மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் கல்முனை சுமத்ராராம மகா விகாரையின் விகாராதிபதி ரணமுத்துக்கல சங்கரத்ன தேரர், கல்முனை ஹாமியா அரபுக் கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி எம்.எப். எம். ஆஷிர் (ரியாழி), காரைதீவு குழந்தை யேசு தேவாலய போதகர் அருட்தந்தை அண்டனி ஜெயராஜ், காரைதீவு நந்தவனப்பிள்ளையார் ஆலய குரு மகேஷ்வர குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆசி வழங்கினர்.

இந்நிகழ்வில் மேலும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் அலுவலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## அட்டப்பளத்தில் வெகுசிறப்பாக நடைபெற்ற தெய்வீக கிராம நிகழ்வு






( வி.ரி.சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நிந்தவூர் பிரதேசசெயலகம் இணைந்து நடாத்தும் தெய்வீக கிராம நிகழ்வானது கடந்த ஞாயிற்றுக்கிழமை அட்டப்பளம் ஸ்ரீ சிங்காரபுரமாரியம்மன் ஆலயம் விநாயகர் அறநெறிப்பாடசாலையில் இடம் பெற்றது.

திருமுன்னிலை அதிதியாக சிவ’ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் நிந்தவூர் பிரதேசசெயலாளர் ஜனாப்.எ.எம் அப்துல் லத்தீப் தலைமையில் தெய்வீக கிராம நிகழ்வானது இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பதில் அரசாங்க அதிபர் வே.ஜெகதீஸன் கலந்து கொண்டதுடன் ,ஆன்மீக அதிதிகளாக சிவஸ்ரீ சாந்தரூபன் குருக்கள் சிவஸ்ரீபத்மலோஜன் சர்மா சிவஸ்ரீஜாதகன்சர்மா பூசகர் வே.தயாலன் கலந்துகொண்டனர்.

காவடிஆட்டம் உள்ளிட்ட இந்துகலாசாரமுறைப்படி அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன், கோமாதாபூஜை ,புனிதமரம்நடல், பிடியரிசி சேமிக்கும் நிகழ்வு ,வஸ்திரதானம் வழங்கல், ஆசீடவாதம் பெறுதல் ,அறநெறிவாசிகசாலை திறத்தல், அன்னதானம் வழங்கல்வரை இடம்பெற்றது.

சிறப்பு அதிதிகளாக வே.வாமதேவன் சிவனருள் பவுண்டேசன் செயலாளர் திரு ச.ரகுநாதன் கமு விநாயகர் வித்தியாலய அதிபர் அட்டப்பளம் சிங்காரபுரமாரியம்மன் ஆலய தலைவர் ரி.கோபாலன் சித்திவிநாயகர் அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர் செ.த.ஜெயக்குமார் நிந்தவூர் ‘ஸ்ரீசிங்காரபுரமாரியம்மன்’ அறநெறிப்பாடசாலை தலைவர் எஸ் பிரபாகரன் பொறுப்பாசிரியர் திருமதி எஸ். ஜிவிதா அட்டப்பளம்‘சித்திவிநாயகர் தலைவர் வ.சந்திரன் ஸ்ரீமுருகன் ஆலய தலைவர் மு. இராமச்சந்திரன் மற்றும் பொது அமைப்புக்கள் ஆலய பிரதிநிதிகள் சமூக அமைப்புக்கள் மாதர்சங்கங்கள் நிருவாகிகள் கிராம உத்தியோகத்தர் சமுர்த்தி உத்தியோகத்தர் இந்து கலாசார உத்தியோகத்தர்கள் கலாசார உத்தியோகத்தர்கள் பெற்றோர்கள் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## மனித உரிமைகள் தொடர்பிலான டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் கற்கைநெறி டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கானசான்றிதழ் வழங்கும் நிகழ்வு, திருக்கோணம ஜேக்கப் பார்க் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுனர் அநுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆறு மாத கால கற்கை நெறியை நிறைவு செய்த 31 நபர்களுக்கான சான்றிதழ்களை இதன் போது வழங்கி வைத்தார். மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பில் இப் பாட நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கே இச் சான்றிதழ் வழங்கப்பட்டன. பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான மகஜர் ஒன்றும் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் தலைவி சட்டத்தரணி உதயகுமார் பிரசாந்தினி அவர்களினால் ஆளுனரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ஜெ.ஜனார்த்தனன் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.



# SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss

info@srijewellery.ch

# Sikaram

துரிதபணமாற்றுச்சேவை

Sikaram INTL Gmbh

Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245

# Prasath Coiffeur

Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00

Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57

# SwissLife Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Teleton : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

# மாணிக்கப்போடி அறக்கட்டளை

REG.NO : TR/I/71

MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI

முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய

# Online Tech Network

நிறுவனத்தில்

ECDL
Office
Windows 10



தொடர்புகளுக்கு

MANOJ MASTER

Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# Seela Food Gastro AG

044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch

Züricherstrasse 15
8400 Winterthur.

# Allegrotto Pizza Kurier

Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch

# புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 10 நிகழ்வு மார்கழி மாதம் 19,20,21,22,23 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் து.கௌரிஸ்வரன் (இலங்கை) கூத்து மீளுருவாக்கம் செயற்பாடும் கோட்பாடும், 20.12.2021 திங்கட்கிழமை காரைக்கவி கந்தையா பத்மானந்தன் (இலங்கை) நாடகமும் நானும், 21,12..2021 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஸ்ர விரிவுரையாளர் கலாநிதி க.கஜவிந்தன் (இலங்கை) குணமாக்கல் அரங்கு,

22.12..2021 புதன்கிழமை வேலு சரவணன் (தமிழ்நாடு இந்தியா) குழந்தைகளின் ஆளுமை விருத்தியில் சிறுவர் நாடகங்களின் வகிபங்கு, 23.12.2021 வியாழக்கிழமை முனைவர் கீ.பார்த்தீபராஜா (தமிழ்நாடு இந்தியா) தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் ,ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார்.

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# சுயதொழிலை ஆரம்பிப்பதற்கான உபகரணங்கள் வழங்கி வைப்பு





**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சுயதொழிலை ஆரம்பிப்பதற்கு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது

செவ்வாய்க்கிழமை கந்தளாய் பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கபில நுவன் அத்துகோரள அவர்களின் தலைமையில் வழங்கி வைக்கப் பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் 'சமுர்த்தி அருணலு' வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாறு கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சுயதொழிலை ஆரம்பிக்க தேவையான உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கபில நுவன் அத்துகோரள, கந்தளாய் பிரதேச சபையின் கௌரவ தலைவர் திரு.சமன் ஏகநாயக்க, கந்தளாய் பிரதேச செயலாளர் உட்பட சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளி குடும்ப உறுப்பினர்களும் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாகரை பிரதேச செயலகத்தில் இரத்த தான முகாம்









**(ந.குகதர்சன்)**

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசசம்மேளன ஏற்பாட்டில் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் இரத்த தான முகாம் இடம்பெற்றது .

பிரதேச செயலாளர் ஏந்திரி .ஜி.அருணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு வைத்தியசாலை இரத்த வங்கி வைத்திய அதிகாரி , ஊழியர்கள் செயற்பட்டிருந்தனர்.

இரத்தம் வழங்குவதற்காக இராணுவ அதிகாரிகள் , பொலிஸ் உத்தியோகத்தர்கள் இளைஞர் சம்மேளன உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தொழில் பயிற்சி அங்கத்தவர்கள் பொதுமக்கள் என பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆறுமுகம் சுதாகரன், கணக்காளர் ஜெ .ஜோர்ஜ் ஆனந்தராஜ் ,நிருவாக உத்தியோகத்தர் ஏ.எஸ்.ஏ ஜனாப் ஜெமில் ,சமூக சேவை உத்தியோகத்தர் ஜனாப் ஏ.நஜீம் இளைஞர் சேவை அதிகாரி கு.சுந்தரலிங்கம் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர் .

இரத்த தானம் வழங்கியவர்களுக்கு Tshirt வழங்கி வைக்கப்பட்டது

# பட்டிருப்பு வலயத்தில் முதலாவது ஆரம்பப் பாடசாலைக்கான திறன் வகுப்பறைத் திறப்பு

**(எஸ்.சபேசன்)**



பட்டிருப்பு வலயத்தில் முதலாவது ஆரம்பப் பாடசாலைக்கான திறன் வகுப்பறைத்திறப்பு விழாவும் ,வருடந்த ஒளிவிழா நிகழ்வும் பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலதில் புதன்கிழமை அதிபர் க.கமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த திறன் வகுப்பறைக்கான நிதி உதவியினை பெரிய கல்லாறு கனடா ஒன்றியத்தின் மூலமே இவ் உதவி முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் பிரதம அததியாக மண்முனை தென் எருவில்பற்றுக் கோட்டக்கல்விப்பணிப்பாளரும் பட்டிருப்பு கல்வி வலய கல்வி அபிவிருத்திக்குரிய பிரதிக்கல்விப்பணிப்பாருமான பு.திவிதரன் அவர்கள் கலந்து கொண்டதுடன் பட்டிருப்புக் கல்வி வலயத்துக்குரிய ஆரம்பப்பிரிவுக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.தயாளசீலன் அவர்களும் பெரியகல்லாறு ஏனைய பாடசாலை அதிபர்களும் ஆலய நிருவாகிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பா.ரமேஸ் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துபொண்டனர்.

இந்தத் திறன் அபிவிருத்தி வகுப்பறை மூலம் பல்வேறுபட்ட ஆளுமையான மாணவர்களை உருவாக்கமுடியும் என்பதற்காக கனடா ஒன்றயம் இவ் உதவியினை வழங்கியுள்ளது. இவ் உதவியினை வபழங்கிய கனடா ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு பாடசாலையின் அதிபர் கமலநாதன் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் ரமேஸ் ஆகியோர் நன்றியினைத் தெரிவித்துள்ளனர்.

# பாராளுமன்ற உறுப்பினர் ஜனாவின் நிதி ஒதுக்கீட்டில் உபகரணங்கள் வழங்கி வைப்பு





**(ந.குகதர்சன்)**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரமின் 2021ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கழகங்கள், பொது அமைப்புகளுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கழகங்கள் மற்றும் பொது அமைப்புகளின் வேண்டுகோளுக்கிணங்க பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் உபகரணங்கள் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிண்ணையடி மில்லர் விளையாட்டுக் கழகத்திற்கு ஒலி பெருக்கி மற்றும் கதிரைகள், விநாயகபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு கதிரைகள், கண்ணகி கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு கதிரைகள் என்பன பாராளுமன்ற உறுப்பினரால் வழங்கி வைக்கப்பட்டது.

# அவுஸ்திரேலிய சென்றார் சிரேஸ்ட விரிவுரையாளர் நிஜாம்

**(நூருல் ஹுதா உமர்)**



தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எச்.எம். நிஜாம் தனது கலாநிதி பட்டப் படிப்பிற்காக (Doctor of Philosophy) அவுஸ்திரேலியாவில் தலைசிறந்த வர்த்தக பீடத்தை கொண்ட Queensland University of Technology (QUT) பல்கலைக் கழகத்திக்கு இன்று அதிகாலை பயணமானார்.

அவர் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களை (Sustainable Development Agenda) அரசதுறையின் பாதீட்டு செய்முறைக்குள் உட்படுத்துவது தொடர்பில் தனது ஆய்வை மேற்கொள்ள உள்ளார். இவர் வர்த்தக முகாமைத்துவம் (BBA.Hons) மற்றும் சட்டம் (LLB) போன்ற இளமாணி பட்டங்களையும் வியாபார நிருவாகம் (MBA) மற்றும் பொது நிருவாகம் (MPM) ஆகிய முதுமாணி பட்டங்களையும் ஏற்கனவே பூர்த்தி செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Importas
Cash & Carry
Bern & Zürich

மாபெரும்
அதிரடி மலிவு விற்பனை
Offer From
18.12.2021 to 15.01.2022

Merry Christmas
& HAPPY NEW YEAR

ஞாயிறு திறப்பு 19.12.2021

ஞாயிறு 19.12.2021 அன்று 10:00 மணி முதல் 19:00 மணி வரை
Importas பெர்ன் சூரிச் கடைகள் திறந்திருக்கும் .

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புது வருட
தை திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்

# மட்டக்களப்பில் சமுர்த்தி சௌபாக்கியா வாரத்தினை முன்னிட்டு வறிய மக்களுக்கு வாழ்வாதார ஊக்குவிப்பு வழங்கி வைப்பு







ஜனாதிபதியின் கோட்டபாய ராஜபக்சவின் நாட்டினை உருவாக்கும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக தேசிய விளைத்திறனான பிரஜை மற்றும் மகிழ்ச்சியாக வாழும் குடும்பமொன்றின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி விசேட வாழ்வாதார தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் 2021 ஆண்டில் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் மனைப்பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் டிசம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 21 ஆம் திகதி வரை சமுர்த்தி சௌபாக்கியா வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு மாவட்டத்தின் சகல பிரதேச செயலக பிரிவுகளிலும் ஊக்குவிப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வ்ருகின்றன.

அந்தவகையில் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி திணைக்களத்தின் சமுர்த்தி விசேட வாழ்வாதார தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் தெரிவு செய்யப்பட சமுர்த்தி பயனாளிகளுக்கான சுயதொழிலுக்கான வாழ்வாதார உபகரணங்கள், அதிஸ்டலாப சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பயனாளியின் வீடு நிர்மாணிப்பதற்கான காசோலைகள் மற்றும் சமுர்த்தி திணைக் களத்தின் ஊடாக தமது வாழ்க்கை தரத்தினை உயர்த்தி கொண்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி பொற்சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி .வாசுதேவன் தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் கே. பராமலிங்கம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. அருணாகரன், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# திருக்கோவில் போலிஸ் பிரிவில் முதலாவது கேஸ் வெடிப்பு பதிவு





**(திருக்கோவில் நிருபர் எஸ்.கார்த்திகேசு)**

அம்பாரை திருக்கோவில் பொலிஸ்ப் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கிராமத்தில் முதலாவது கேஸ் வெடிப்பு ஒன்று நேற்று இரவு இடம்பெற்று இருப்பதுடன் தெய்வாதினமாக வீட்டில் யாருக்கு எந்தவொரு ஆபத்தும் இடம்பெறவில்லை.

இவ் கேஸ் வெடிப்பானது விநாயகபுரம் 4 கடற்கரை வீதியில் அமைந்துள்ள பாக்கியராசா ஜெயந்தினியின் வீட்டில் புதன்கிழமை (15) இரவு இடம்பெற்றுள்ளது.

இவ் கேஸ் வெடிப்பு பற்றி வீட்டில் உரிமையாளர் தெரிவிக்கையில் தாம் கேஸ் அடுப்பில் சமையல் வேலைகளை முடித்து விட்டு ஒப் செய்து விட்டு வீட்டினுள் இருந்த வேளை சமையல் அறையில் ஏதோ சத்தம் கேட்டதாகவும் வந்து பார்த்தபோது கேஸ் அடுப்பு வெடித்து சிதறி கிடந்தாகவும் தெரிவித்து இருந்தார்.

இவ் சம்பவம் தொடர்பாக அறிந்து கொண்ட திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் திருக்கோவில் பொலிஸ் நிலையப் பதில் கடமை பொலிஸ் அதிகாரி எஸ்.எஸ்.எஸ்.சமந்த மற்றும் திருக்கோவில் பிரதேச செயலக சமூர்த்தி சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.பி.சீலன் கிராம சேவை உத்தியோகத்தர் அனித்தன் அகியோரும் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஞாயிறன்று மகா கும்பாபிசேகத்திற்கான பொதுக்கூட்டம்



**( வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப்பிரசித்திபெற்ற நிந்தவூர் ,மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சிஅம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு ஆலயபரிபாலன சபைத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் ஆலயவளாகத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆறுவருட காலத்திற்குப்பிற்பாடு நடைபெறவிருக்கும் இப்பொதுக்கூட்டத்திற்கு, அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்கிராமங்களில் வாழும் மீனாட்சிஅம்மன் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பொதுவான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் இப்பொதுக்கூட்டத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும் தினம் பற்றியும் நடைமுறைகள் பற்றியும் விளக்கமளிக்கவுள்ளார்.

அந்த மகாகும்பாபிசேகத்திற்கான பிரதான விழாக்குழு மற்றும் உப குழுக்கள் பகிரங்கமாகத் தெரிவுசெய்யப்படவிருக்கின்றன.எனவே சகல மீனாட்சிஅம்மன் அடியார்களையும் கலந்துகொள்ளுமாறும் மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற பரிபூரண ஒத்துழைப்பை நல்குமாறும் ஆலயபரிபாலனசபைச்செயலாளர் த.சண்முகநாதன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மடத்தடி ஸ்ரீ மீனாட்சிஅம்மன் ஆலய வளாகத்தில் நிருமாணிக்கப்பட்டுள்ள புதிய ஆலயத்தின் ஆவர்த்தன மகா கும்பாபிஷேகம் அடுத்தவருடம் (2022) மார்ச் மாதமளவில் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கான விருது விழா







**( எம். என். எம். அப்ராஸ் கல்முனை நிருபர்)**

கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கான விருது வழங்கும் விழா தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் அதிகார சபையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.பாத்திமா சினோஸ் அவர்களின் ஒருங்கிணைப்பில் ,அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசனின் மேற்ப்பார்வையில் அதிகார சபையின் தலைவர் எம் .சி.எம். சுனில் ஜெயரத்தன தலைமையில் சாய்ந்தமருது லீ மெடிரியன் மண்டபத்தில் (15) இடம்பெற்றது .

அம்பாறை , மட்டக்களப்பு ,திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் 20 பேருக்கு சான்றிதழ்கள் மற்றும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் ,அத்துடன் ஆரம்ப தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மேலும் 20 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது

சிறிய உற்பத்தி நிறுவனத்துக்கான விருது , சிறந்த விவசாய உற்பத்தி நிறுவனத்துக்கான விருது , விசேட நிறுவனத்துக்கான விருது மற்றும் ஊக்குவிக்கும் முகமாக சான்றிதழ்கள் என்பன தொழில் முயற்சியாளர்களுக்கு அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டது . இதன் போது வன விலங்கு பாதுகாப்பு வன வள மேம்பாடு இராஜாங்க அமைசசர் விமல வீரதிசாநாயக்க மற்றும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவி செயலாளர்கள் , அம்பாறை மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் , தொழில் முயற்சியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

**(சமிரா)**

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 'நேற்று (16) மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

2021 ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களது முன்னேற்ற மீளாய்வு இதன் போது முன்வைக்கப்பட்டது.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்களை கிராமங்களுக்கு சென்று ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றதாகவும் மக்களுடைய உற்பத்திசார் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதாக இதன்போது அரசாங்க அதிபர் சமன் தர்சன பாடிகோராள தெரிவித்தார்.

நாட்டினுடைய தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். குறிப்பாக உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த கூடிய வகையில் திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதாகவும் அதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டப்படுவதாக கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம் பல அரிய வளங்களைக் கொண்டு காணப்படுகின்றது. மக்களுடைய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து அந்த பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்குவதற்கு அரசியல் தலைமையாகுய தாம் தயாராக இருப்பதாகவும் அனைத்து உத்தியோகத்தர்களும் பொறுப்புடன் செயற்படுவதன் மூலம் 2022ஆம் ஆண்டு பல்வேறு வகையான அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவற்றை மக்கள் மயப்படுத்த கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப் பெறும் என்றும் இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல தெரிவித்தார்.

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினவிழிப்புணர்வு நடைபவனி



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை நினைவு கூறும் முகமாக மாற்றுதிறனாளிகளின் உரிமைகளை உறுதிப்படுத்தல் மற்றும் உட்படுத்தல் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனியானது காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் பிரதேச மட்ட மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக்குழுவின் ஏற்பாட்டில், உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபனின் வழிகாட்டலின் கீழும் சமூக சேவை உத்தியோகத்தர் கு.குணரெட்ணம் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சித்தி நளிபா மற்றும். சமூக சேவை பிரிவின் உத்தியோகத்தர்கள் அதனுடன் இணைந்ததாக பிரதேச மாற்றுதிறனாளிகள் அதிகமானவர்களும் நடைபவனியில் கலந்துகொண்டு சிறப்பித்தபோது..

**படங்கள் காரைதீவு நிருபர் சகா**


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT

# மார்கழி மாத மகிமை!



பன்னிரண்டு மாதங்களில் மார்கழி மாதத்திற்கென தனிச் சிறப்பு உண்டு. தனி மகிமை உண்டு. இந்துசமயத்திற்கு மட்டுமல்லாது சகல சமயங்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது இம் மார்கழி மாதம்.

'மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்' என பகவான் கிருஷ்ணர் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

இந்த மாதம் ஆன்மீகத்தில் தேவர்களுக்கான வைகறை அதிகாலை நேரமாகக் குறிப்பிடப்படுகி றது. எனவே இந்த மாதம் முழுவதும் இறை வழி பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வருடத்தின் ஒன்பதாவது மாதம் மார்கழி ஆகும். இம்மாதம் தனுர் மாதம் என்று ம் அழைக்கப்படுகிறது.

இம்மாதம் முழுவதும் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து விட்டு வாசலில் வண்ணக் கோலம் இட்டு இறைவழிபாடு செய்வது வழக்கமாக மேற்கொள்ளப்படுகிறது.

ஓசோன் படலமானது பூமிக்கு மிகஅருகில் இம்மாதத்தில் உள்ளது. எனவே சுத்தமான காற்றை சுவாசித்து உடல்நலனைப் பேணும் பொருட்டு அதிகாலை வழிபாடு இம்மாதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும் அதிகாலை இறைவழிபாடு பற்றி மாணிக்க வாசகர் திருவெம்பாவையிலும், ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையிலும் போற்றியுள்ளனர்.

மார்கழியில் அதிகாலை வழிபாட்டில் கோவில்களில் வேதங்களுக்குப் பதிலாக திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆழ்வார் பாசுரங்கள் பாடப்படுகின்றன.

இம்மாதத்தில் மிருகசீரிட நட்சத்திரத்தில் என்றும் பதினாறு மார்க்கண்டேயர் பிறந்தார். எனவே மரணத்தை வெல்லும் மாதம் மார்கழி என மார்க்கண்டேய புராணம் குறிப்பிடுகிறது. ம்ருத்யுஞ்ச ஹோமம் செய்ய இம்மாதம் சிறந்தாகக் கருதப்படுகிறது.

இம்மாதத்தில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, அனும ஜெயந்தி, பாவை நோன் பு, திருவெம்பாவை நோன்பு, படி உற்சவம், விநாயகர் சஷ்டி விரதம், போன்ற விழாக்க ள், பண்டிகைகள், விரதமுறைகள் பின்பற்றப் படுகின்றன.

## திருவாதிரை:

திருவாதிரை திருவிழா மார்கழியில் பௌர்ணமியை ஒட்டிய திருவாதிரை நட்சத்திர நாளில் கொண்டாடப் படுகிறது. இவ்விழா வானது சிவபெருமானின் வடிவமான ஆடலரசன் நடராஜருக்கு கொண்டாடப்படுகிறது.

திருவாதிரைக் கொண்டே சிவபெருமானு க்கு ஆதிரையன் என்ற பெயர் வழக்கத் தில் உள்ளது. இவ்விழாவானது 1500 ஆண்டுகள் பழமையானது.

இவ்விழா பற்றி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் தங்கள து பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். திரு வாதிரை, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகத்தி ன் ஒரு சில பகுதிகள்இ இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் ஆகியோரால் மிகவிம ர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாட்டில் திருச்சிற்றம்பலம் என்னும் தில்லை சிதம்பரத்திலும், உத்திரகோச மங்கையிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவின்போது திருவாதிரைக்களியும், ஏழுகறிக்கூட்டும் இறைவனுக்கு படைக்கப் படுகின்றன. திருவாதிரைக்கு ஒருவாய் களி என்பது இவ்விழா பற்றிய பழமொழியாகும்.

இன்றைய தினம் விரதமுறை மேற்கொள்ளப் படுகிறது. இவ்விரதம் சிவனுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. இவ்விரத வழிபாடு மேற்கொண்டால் நடனகலையி ல் சிறக்கலாம்.

## வைகுண்ட ஏகாதசி:

வைகுண்ட ஏகாதசி மார்கழியில் வளர்பி றையில் கொண்டாடப் படுகிறது. வைகு ண்ட ஏகாதசியில் திருமால் வழிபாடு மிகச்சிறப்பாக மேற்கொள்ளப் படுகிறது.

எல்லா இந்து மக்களாலும் இத்தினத்தில் விரதமுறை மேற்கொள்ளப்படுகிறது. திருமாலை வழிபடும் விரதமுறைகளில் இது மிகச்சிறந்ததாகக் கருதப்படுகிறது.

காயத்ரிக்கு மிஞ்சிய மந்திரம் இல்லை,ஏகாதசிக்கு மிஞ்சிய விரதமும் இல்லை என்பது இவ்விரதம் பற்றிய பழமொழியாகும். இவ்விழாவில் சொர்க்க வாசல் திறப்பு என்பது முக்கிய நிகழ்சியாகும்.

வைகுண்ட ஏகாதசி அன்று துளசி நீரினை மட்டும் உட்கொண்டு பகல் மற்றும் இரவு விழித்திருந்து திருமால் பற்றிய பாடல்கள் பாடி விரதமுறை மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரத வழிபாடு வைகுந்த பதவி என்னும் மோட்சத்தை நல்கும் என்று கருதப்படுகிறது.

## பாவை நோன்பு:

ஆயர்பாடியில் கோபிய ர்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் ஆற்றிற்கு சென்று நீராடி மண்ணால் செய்த காத்யாணி தேவியை வழிபட்டு நல்ல கணவன் கிடைக்க வழிபாடு நடத்தினர். பெண்கள் கடைப்பிடித்த விரதமாயி ன் இவ்விரதம் பாவை நோன்பு என்று வழங்கலாயிற்று.

ஆண்டாள் பாவை நோன்பை மேற்கொண்டே அரங்கனை கணவனாக அடைந்தாள். பாவை நோன்பின்போது நெய், பால் முதலியவற்றை உண்ணாமலும், கண்ணுக்கு மையிடாமல், தலையில் மலர் சூடாமல் புறஅழகில் நாட்டம் செலுத் தாமல் இறைநாட்டத்தில் மட்டும் மனதினைச் செலுத்தி பாவைநோன்பினை மேற்கொண்டாள்.

எனவே கன்னிப்பெண்கள் நல்ல கணவன் கிடைக்க மார்கழி மாதத்தில் அதிகாலை யில் எழுந்து நீராடி கோவிலுக்குச்சென்று ஆண்டாள் எழுதிய திருப்பாவையைப் பாடி வழிபாடு நடத்துகின்றனர்.

திருமணமான பெண்கள் மகிழ்ச்சியான மணவாழ்வு நீடிக்க வேண்டியும்இ குடும்ப நலன் வேண்டியும் இவ்விரத்தினை மேற்கொள்கின்றனர். பாவை நோன்பு 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

திருவெம்பாவை நோன்பு:

திருவெம்பாவை நோன்பு என்பது மார்கழி யில் வரும் திருவாதிரைக்கு ஒன்பது நாட்களுக்கு முன்பு கடைப்பிடிக்கப் படுகிறது. அதாவது திருவாதிரையோடு சேர்த்து விரத நாட்கள் மொத்தம் பத்து நாட்கள் ஆகும்.

இந்நோன்பில் அதிகாலையில் எழுந்து நீராடி சிவகாமியுடன் கூடிய நடராஜரை வழிபடுவர். இவ்விரதத்தின்போது ஒரு வேளை அவித்த உணவினை மட்டுமே உண்பர்.

இவ்விரத்தினை பெரும்பாலும் கன்னிப் பெண்கள் கடைப்பிடிப்பர். இவ்விரதத்தின் போது திருவெம்பாவை பாடல்கள் பாடப் படுகின்றன. இவ்வழிபாட்டில் பிட்டு படைக்கப்படுகிறது. இதனால் இவ்வழிபாடு பிட்டு வழிபாடு என அழைக்கப்படுகிறது.

## முருகன் படி உற்சவம்:

ஆண்டுதோறும் டிசம்பர் 31ந் தேதி மலைமேல் உள்ள முருகன் கோவில்களில் படி உற்சவம் என்ற விழா சிறப்பாக நடைபெறுகிறது.

அன்றைய தினம் பக்தர்கள் குழுக்களாக மலை படிக்களின் ஒவ்வொரு படியிலும் நின்று திருப்புகழ் பாடல்களைப் பாடுகின் றனர். இவ்விழா அறுபடை வீடுகளில் ஒன் றான திருத்தணியில் மிகவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

## விநாயகர் சஷ்டி விரதம்:

இவ்விரதம் கார்த்திகை மாதம் வளர்பிறை பிரதமை முதல் தொடங்கி மார்கழி வளர் பிறை சஷ்டி வரை மொத்தம் 21 நாட்கள் கடைப்பிடிக்கப்படுகிறது.

இவ்விரத முறையில் ஆண்கள் வலக்கை யிலும்இ பெண்கள் இடக்கையிலும் 21 இழைகளாலான காப்பினைக் கட்டிக் கொள்கின்றனர்.

முதல் 20 நாட்களும் ஒரு வேளை மட்டும் உணவினை உட்கொள்கின்றனர். கடைசி நாள் முழுஉபவாசம் மேற்கொள்கின்றனர்.

விரதத்தின் நிறைவு நாள் அன்று பலவித மான உணவுப் பொருட்களை தானமாகக் கொடுப்பர். இவ்விரதத்தின் பலனாக நல்ல வாழ்க்கைத் துணை, நற்புத்திரப் பேறு ஆகியன கிடைக்கும்.

## அனுமன் ஜெயந்தி:

மார்கழி மாதத்தின் மூல நட்சத்திரத்தோடு கூடிய அமாவாசை அன்று அனுமன் ஜெயந்தி தமிழ் நாட்டில் கொண்டாடப் படுகிறது.அனும ஜெயந்தி அன்று விரதம் மேற்கொண்டு மன உறுதி, ஆற்றல், தைரியம் ஆகியவற்றை அருளுமாறு பிரார்த்தனை மேற்கொள்ளப் படுகிறது. அனுமனிற்கு சிறப்பு வழிபாடுகள், ஆராதனைகள் மேற்கொள்ள படுகின்றன.

இவ்வாறாக மார்கழியில் பிள்ளையார், முருகப்பெருமான், சிவபெருமான், திருமால், என எல்லா கடவுளுரும் வழிபடப்படு கின்றனர்.

இதுவே மார்கழி மாத சிறப்பு ஆகும்...



# கொரோனாவினால் பாதிக்கப்பட்ட மன்னார் மீனவர்களுக்கு உதவிக்கரம் நீட்டப்படும்

## சீனா உயர் ஸ்தானிகர் கியூ சேன் கோன்








**( வாஸ் கூஞ்ஞ)**

கோவிட் தொற்று நோய் காரணமாக இங்குள்ள மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கியதை நாங்கள் அறிவோம். இதன் முதல் கட்டமாக உங்களுக்கு சினொபாம் தடுப்பூசி வழங்கியிருந்தபோதும் எதிர்காலத்தில் இங்குள்ள மீனவர்களுக்கு உதவிகள் செய்ய காத்திருக்கின்றொம் என மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்ட இலங்கைக்கான சீனா நாட்டு உயர் ஸ்தானிகர் கியூ சேன் கோன் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனா நாட்டு உயர் ஸ்தானிகர் கியூ சேன் கோன் தனது குழுவினருடன் வியாழக்கிழமை (16.12.2021) மாலை மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாருக்கு வருகை தந்திருந்த இவ் குழுவினரை மன்னார் மாவட்ட கடற்தொழில் சம்மேளன மீனவ சமூகத்தினரால் வரவேற்கப்பட்டிருந்தனர்.

மன்னார் கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள மண்டபத்தில் மன்னார் மாவட்ட கடற்தொழில் சம்மேளனத் தலைவர் அ.யஸ்ரின் சொய்சா தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திலீபன், வடக்கு மாகாண சபை செயலாளர் பொ.குகநாதன் மீனவ சங்க பிரதிநிதிகள் மற்றும் மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவ் நிகழ்வின்போது சீனா உயர் ஸ்தானிகரினால் மீனவர்களுக்கான ஒரு தொகுதி வலைகளும் மற்றும் உலர் உணவுப் பொதிகளும் மீனவ சங்க பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன

இதைத் தொடர்ந்து இலங்கைக்கான சீனா நாட்டு உயர் ஸ்தானிகர் கியூ சேன் கோன் தொடர்ந்து உரையாற்றுகையில்

நாங்கள் இங்கு உங்கள் பண்பாட்டு உடையுடன் (வேஷ்டி) வந்திருப்பது உங்களுடனான உறவைக் காட்டுவதற்கு.

கொவிட் 19 தொற்று நோய் காலங்களில் இங்குள்ள மீனவ மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வந்ததை நாங்கள் புரிந்து கொள்ளுகின்றோம்.

இதனால் நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய வேண்டியது எங்களது கடமைகளில் ஒன்றாகும்.

இதனால்தான் நாங்கள் முதலில் உங்களுக்கு சினோபாம் என்ற தடுப்பூசியை முதலில் வழங்கினோம்.

நாங்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கும் இதைத் தொடர்ந்து மன்னாருக்கும் விஜயத்தை மேற்கொண்டுள்ளோம்.

இதன்போது நாங்கள் உங்கள் மீனவ குடும்பங்களுக்கு இருபது மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை கையளிக்க இருக்கின்றோம்.

இதில் ஆறு மில்லியன் ரூபாவுக்கு மீன்பிடி வலைகளையும் மற்றும் 14 மில்லியன் ரூபாவுக்கு தலா 6000 ரூபா பெறுமதியான மீனவ குடும்பங்களுக்கு 2500 உலர் உணவுப் பொதிகளையும் இன்று உங்களுக்கு கையளிக்கின்றோம்.

இந்த அன்பளிப்பானது சிறியதாக இருந்தாலும் எதிர்காலத்தில் நாங்கள் மேலும் உங்களுக்கு உதவி செய்ய இருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என இவ்வாறு தெரிவித்தார்.

# இலங்கையைச் சேர்ந்த சகி லத்தீப்க்கு வருகை பேராசிரியர் நியமனத்துடன் மேலும் 3 சர்வதேச உயர் விருதுகள்

WORLD SCIENTIST AWARDS சர்வதேச போட்டியில் BIOMEDICAL SCIENTIST GRAND AWARDS இதனுடன் KOREA INVENTION ACADAMY மூலம் VISITING PROFESSOR நியமனம் மற்றும் WORLD INVENTORS FESTIVAL சர்வதேச கண்டுபிடிப்புகள் போட்டியில் MEDICINE PHARMACY ORDER OF MERIT உயர் விருது மற்றும் EUROPEAN INVENTION AND SCIENCE MEDAL OF HONOR AWARDS CÀ KNIGHT HONORARY ORDER உயர் விருதும் பெற்று சர்வதேச ரீதியில் இலங்கை தாய் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார் சகி லத்தீப்.

இலங்கை ஆயுர்வேத திணைக்கள அனுமதி, 2018 ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி விருது, 2020 ஆம் ஆண்டு கனடா சர்வதேச கண்டுபிடிப்புக்கான உயர் விருதுகள் பெற்ற மருத்துவ பசையான AROGYA HERBAL TOTAL SKIN PASTE சோரியாசிஸ், எக்சிமா, சொறி, சிரங்கு, முகப்பரு, தழும்புகள், முதலான சர்ம நோய்களை குணப்படுத்தும் ஆயுர்வேத மருந்தாகும்.

குருநாகல் மாவட்டத்தின் இப்பாகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த இளம் கண்டுபிடிப்பாளரே இந்த M.D.M. சகி லத்தீப்.

இவ்விருது வழங்கும் வைபவம் INTERNATIONAL FEDERATION OF INVENTORS ASSOCIATION இன் அனுசரணையில் கொரியா நாட்டில் இம்முறை



கொரோனா காரணமாக ONLINE மூலம் KOREA INVENTION NEWS மற்றும் ஓOREA INVENTION ACADAMY இனால் 10 ஆவது முறையாக நடாத்தப்படும் WORLD INVENTORS FESTIVAL 2021 மற்றும் 8ஆவது முறையாக நடாத்தப்படும் WORLD SCIENTIST AWARDS 2021 சர்வதேச கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சிகளுக்கான போட்டிகளில் 30க்கும் மேட்பட்ட நாடுகளில் இருந்து பங்குபற்றிய கண்டுபிடிப்புகளுக்கு மத்தியில் இலங்கை சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு நபர் எனும் பெருமையும் பெறுகிறார்.

விருது வழங்கும் விழா 15 December 2021 Korea Invention Acadamy Cß Lectures Hall இல் நடத்தப்பட்டது. சகி லத்தீப்பின் விருதுகள் இலங்கைக்கு சர்வதேச தபால் சேவை மூலம் அனுப்பப்படும்.

மேலும் தனக்கு உறுதுணையாக இருந்து உதவிய இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைகுழுவிற்கு நன்றிகளை தெரிவிக்கிறார் சகி லத்தீப்.

சகி லத்தீப், கண்டி ராஜ்யத்தில் 1%81 1798 ஆண்டுகளில் ஆட்சி புரிந்த ராஜாதி ராஜசிங்க மன்னனின் அரச வைத்திய பரம்பரையான "RAAJADHI RAJASINHA VEDAGE MUHANDIRAM VEDAPARAPURA" வம்சாவழியை சேர்ந்த பாரம்பரிய வைத்தியர் மற்றும் சுதேச வைத்திய மாணவராவார்.

சோரியாசிஸ், சொறி, சிரங்கு, எக்சிமா, முகப்பரு, தழும்புகள், கால் வெடிப்பு முதலான சர்ம பிரச்சினைகளுக்கு AROGYA HERBAL TOTAL SKIN PASTE மிக சிறந்த தீர்வாகும்,

நேரடியாகவோ தொலைபேசி மூலமோ எமது SKIN CLINIC சிகிச்சை நிலைய மருத்துவருடன் தொடர்பு கொண்டு பரிசோதித்து சிகிச்சை பெறவோ அல்லது இலவச மருத்தவ ஆலோசனைகள் பெறவோ முடியும்.

தற்பொது இலங்கையில் அனைத்து பகுதிகளுக்கும் வீட்டிற்கே கொண்டு வந்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு Call/SMS/ WhatsApp 0722227000

# மக்களுக்கு நியாயம் கிட்டும் வரை பின்வாங்கப் போவதில்லை

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**(க.கிஷாந்தன்)**

'பெருந்தோட்டத் தொழிலாளர்களை அடக்கி ஆளமுற்படும் தோட்டக் கம்பனிகளுக்கு பாடம் புகட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதற்கான தொழிற்சங்கப் போராட்டத்தை இ.தொ.கா. ஆரம்பித்துவிட்டது. அக்கரபத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்டங்களில் வேலை செய்யும் மக்களுக்கு நியாயம் கிட்டும்வரை பின்வாங்கப் போவதில்லை.' என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அக்கரபத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன என சுட்டிக்காட்டி அதற்கு எதிராகவும், தமது தொழில் உரிமைகளை பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் தோட்டத் தொழிலாளர்கள் பணிபுறக்



கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்களின் இந்த போராட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்கள் முழுமையான ஆதரவை வழங்கியுள்ளன.

இந்நிலையில் அக்கரபத்தனை பிளான்டேசனின் பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட முகாமைத்துவ தரத்திலான அதிகாரிகளுக்கும், இ.தொ.கா. உள்ளிட்ட தொழிற்சங்க பிரமுகர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் பிராந்திய தொழில் ஆணையாளர் தலைமையில் நேற்று (16.12.2021) அட்டனிலுள்ள தொழில் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது நாளொன்றுக்கான பெயருக்கு 20 கிலோ பறித்தாக வேண்டும் என்பது உட்பட தோட்ட நிர்வாகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் ஏற்கவில்லை. அதேபோல் தொழிற்சங்கங்களால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களை நிர்வாகம் ஏற்கவில்லை. இதனால் உறுதியான இணக்கப்பாடின்றி பேச்சுவார்த்தை முடிவடைந்தது. அதன்பின்னர் சந்திப்பு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறியவை வருமாறு,

'பெருந்தோட்ட மக்களை மிகவும் மோசமான நிலைக்கு அக்கரபத்தனை பிளான்டேசன் தள்ளிக்கொண்டிருக்கின்றது. சில தோட்டங்களில் 10 முதல் 12 கிலோ கொழுந்து பறிப்பதே கடினமாக செயல். இந்நிலையில் 20 கிலோ பறிக்குமாறு நிர்ப்பந்திக்கின்றனர். இதனை நாம் ஏற்கவில்லை.

துரைமாரை இறக்கி கொழுந்து பறிக்க சொன்னோம், அவர்கள் எவ்வளவு பறிக்கின்றார்களோ அவர்களைவிட அதிகமாக 2 கிலோ பறித்து தருவதாக குறிப்பிட்டோம். அதற்கு அவர்கள் உடன்படவில்லை. கொடுப்பனவுகளிலும் பிரச்சினைகள் உள்ளன. எனவே, எமது போராட்டம் தொடரும்.

கடந்த ஒரு வருடமாக நாம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவில்லை. மக்கள் நலனுக்காக அமைதி காத்தோம். இனியும் மக்கள் நலன் பாதிக்காத வகையில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும். தீர்வுக்காக போராடுவோம். அனைத்து தொழிற்சங்கங்களும் ஆதரவு வழங்கின. அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.' என்றார்.

அதேவேளை, மேற்படி சந்திப்பில் பங்கேற்ற தோட்ட நிர்வாக தரப்புகளிடம் கருத்து கோர முயற்சித்த போதும் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதை தவிர்த்துக் கொண்டனர்.

# ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் இலங்கையின் தடுப்பூசி திட்டத்திற்கு பாராட்டு

**( வாஸ் கூஞ்ஞ)**

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் கன்னி விக்னராஜா அவர்கள் புதன்கிழமை (15) பிற்பகல் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை அலரி மாளிகையில் சந்தித்தார்.

குறித்த சந்திப்பின்போது இலங்கையில் செயற்படுத்தப்படும் கொவிட் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

'இலங்கையில் மிகச்சிறந்த தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் காணப்படுகிறது' என விக்னராஜா அவர்கள் குறிப்பிட்டார்.

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள பல நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளதாக இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை தற்போது மீண்டும் படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்திருப்பதாக



கௌரவ பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமை காரணமாக உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தடுப்பூசி ஏற்றல் செயற்பாடுகளின் ஊடாக சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் அதிகரிக்கும் என தான் எதிர்பார்ப்பதாக விக்னராஜா அவர்கள் நம்பிக்கை வெளியிட்டார்.

கொவிட்19 தொற்று நிலைமைக்கு பின்னரான பொருளாதார நிலை குறித்து கலந்துரையாடிய திருமதி. விக்னராஜா அவர்கள்இ இலங்கைக்கு உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு பல வழிகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய நாடுகள் சபையுடன் மிக நெருக்கமாக பணியாற்றியுள்ளதாக சுட்டிக்காட்டிய கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அது எதிர்காலத்திலும் தொடரும் என தெரிவித்தார்.

குறிப்பாக தனியார் துறையில் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குதன் அவசியம் மற்றும் தனியார் துறை வேலை வாய்ப்பிற்கு இளைஞர் யுவதிகளை ஊக்குவிப்பதன் அவசியம் என்பன குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

விக்னராஜா அவர்கள் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (யுஎன்டிபி)) உதவி நிர்வாகியாகவும் அதன் ஆசிய பசுபிக் பிராந்திய பணியகத்தின் பிராந்திய பணிப்பாளராகவும் விளங்குகிறார். அதற்கமைய காலநிலை மாற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகிய துறைகளில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே இலங்கைக்கு உதவி வருவதாக அவர் கௌரவ பிரதமரிடம் தெரிவித்தார்.

இலங்கையில் யுஎன்டிபி ஆதரவு பெற்ற முக்கிய திட்டங்களில் ஒன்று தற்போது ஏழு ஆண்டுகளாக செயல்பாட்டில் உள்ள காலநிலைக்கு ஒத்த ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ திட்டம் (சிஆர்ஐடபிள்யூஎம்பி) 'இலங்கையின் வறண்ட வலயத்தில் விவசாயிகளின் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திறனை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டமாகும்.

இலங்கையின் நிலையான அபிவிருத்தி சபையின் (எஸ்டீசீ) ஒத்துழைப்புடன் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (எஸ்டீஜீஎஸ்) அடைவதற்காக முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் தொடர்பில் யுஎன்டீபி இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி றொபர்ட் ஜூகாம் அவர்கள் இதன்போது கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு விளக்கமளித்தார்.

# ஆலையடிவேம்பு தெற்கு வலயத்திற்குட்பட்ட 7 சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அலுவலகங்கள் திறந்து வைப்பு






(வி.சுகிர்தகுமார்)

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களை வலுவானதாக்கி அவற்றினூடாக சமுர்த்தி திட்டத்தின் பலாபலன்களை கிராம மட்டத்தில் இலகுவாக பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அலுவலகங்கள் கிராமங்கள் தோறும் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் ஆலையடிவேம்பு தெற்கு வலயத்திற்குட்பட்ட 7 சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அலுவலகங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டன.

வலய முகாமையாளர் கே.அசோக்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் திட்ட முகாமையாளர் ஆர்.மதியழகன் வலய உதவி முகாமையாளர் கே.பி.ராஜசிறி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு அலுவலகங்களை திறந்து வைத்தனர்.

குறித்த அடிப்படை அமைப்புக்களுக்கு சமுர்த்தி வங்கியினால் கடன் வழங்கப்பட்டு அவ் அமைப்பின் அங்கத்துவ சுயதொழில் முயற்சியாளர்களுக்கான சிறு கடன்களை இலகு முறையில் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96 வது ஜனன தின விழா









(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலையம் சர்வதேச பாடசாலையில் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96 வது ஜனன தின விழா கலை, கலாச்சார ஆன்மீக நிகழ்வுகளுடன் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கொட்டக்கலை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சாவித்ரி ரவிவர்மா, தலவாக்கலை ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலைய பணிப்பாளர் வைத்தியர் கருணைராசன் , ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலைய பாடசாலையின் அதிபர் உமாதர்சினி ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# பேசாலையில் சனிக்கிழமை ஊர் மறியல்

( வாஸ் கூஞ்ஞ)

பேசாலையில் டெங்கு அபாயத்தை தொடர்ந்து இதிலிருந்து மக்களை காப்பாற்றிக் கொள்ளும் முகமாக இவ் பகுதியில் நாள் முழுதும் பாரிய சிரமதானத்தை மேற்கொள்ளும் முகமாக ஊர் மறியல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியில் அன்மையில் சில தினங்களாக பெய்த பலத்த மழையின் காரணமாக மன்னார் பகுதி பெரும் வெள்ளத்தில் மூழ்கிகாணப்பட்டது.

இதில் மக்கள் அதிகமாக செறிந்து வாழும் மன்னார் தீவில் வாழும் மக்கள் மழை வெள்ளத்தின் காரணமாக அதிகமானோர் இடம்பெயர்ந்து வாழ்ந்திருந்து மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பியிருக்கின்றபோதும் தற்பொழுதும் பல வீடுகளில் வெள்ள நீர் காணப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக இப்பகுதியில் நுளம்பு தொல்லைகளும் அதிகரித்து காணப்படுகின்றது.

இவ் நுளம்பு தொல்லையால் மன்னார் பகுதியில் குறிப்பாக மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பனங்கட்டுகொட்டு. சின்னக்கடை, எழுத்தூர், தோட்டவெளி மற்றும் பேசாலை ஆகிய பகுதிகளில் டெங்கு அபாயம் தோன்றியுள்ளது என சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதிலும் குறிப்பாக மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றான பேசாலையில் டெங்கு அபாயம் சடுதியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதை முன்னிட்டு பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கு சபையினரின் ஏற்பாட்டில் புதன்கிழமை (15.12.2021) ஆலய பங்கு மணைமண்டபத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் இவ் கிராமத்தின் சகல தரப்பு அமைப்புக்ளும் விஷேட கூட்டம் ஒன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சனிக்கிழமை (18.12.2021) பேசாலை பகுதியில் ஊர் மறியல் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அன்றையத் தினம் சகல தரப்பினரும் அதாவது அரச மற்றும் அரச சார்பற்ற ஊழியர்கள். வர்த்தகர்கள், தொழிலாளர்கள், போக்குவரத்து சேவையினர் என அனைத்து பகுதினரும் தங்கள் தொழில்களை முடக்கிவிட்டு டெங்கிலிருந்து இவ் கிராமத்தை காப்பாற்றிக் கொள்ளும்முகமாக கிராமம் பூராகவும் அன்றைய நாள் முழுதும் பாரிய சிரமதானம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு அதற்காள ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உபகரணங்கள் வழங்கி வைப்பு





(பைஷல் இஸ்மாயில்)

திருகோணமலை - மூதூர் பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு போசனை நிர்பீடண சக்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இலைக்கஞ்சி தயாரித்து வழங்குவதற்கான முழுமையான உபகரணங்களை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் அவர்களினால் கல்லூரியின் பிரதி அதிபர் (திருமதி) உ.பரமேஸ்வரனிடம் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ், மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு. கே.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கழிவுகளை சேகரிக்கும் தொட்டிகள் ஆலையடிவேம்பு பிரதே சபையால் வழங்கப்பட்டு வருகின்றது







(வி.சுகிர்தகுமார்)

கழிவுகளை தரம்பிரித்து சேகரிக்கும் நடவடிக்கைகளை ஆலையடிவேம்பு பிரதேச சபை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் மதஸ்தலங்கள் வைத்தியசாலைகளுக்கு கழிவுகளை சேகரிக்கும் தொட்டிகள் பிரதே சபையால் வழங்கப்பட்டு வருகின்றது.

பிரதேச சபையின் தவிசாளர் த.கிரோஜாதரன் தலைமையில் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கழிவுகளை சேகரிக்கும் தொட்டிகள் வழங்கும் நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு வழங்கி கழிவுகளை சேகரிக்கும் தொட்டிகளை வைத்தனர்.

இதன்போது 28 இற்கும் மதஸ்தலங்கள் மற்றும் 12 பாடசாலைகளுக்கு தலா இரண்டு கழிவுகளை சேகரிக்கும் தொட்டிகள் வீதம் வழங்கி வைக்கப்பட்டது.

நீண்டகாலமாக ஆலையடிவேம்பு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவகற்றல் முகாமைத்துவத்தை மக்கள் முறையாக மேற்கொள்ளப்படாத நிலையில் இதனை சீர்படுத்தும் விதத்தில் குறித்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை ஸாஹிரா கல்லூரிக்கு குடிநீர் தொகுதி கையளிப்பு





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் கொவிட் கொரோனா வைரஸ் நோயினை கருத்திற்கொண்டு திருகோணமலை தி/ ஸாஹிறா தேசிய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சுகாதார நலன் கருதி பல பேர் பயன்படுத்தக்கூடியவாரான நீர் தொகுதி உத்தியாகபூர்வமாக கையாளிக்கப்பட்டது. திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபை உப தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்களினால் உத்தியாகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

தண்ணீர் தாங்கி மற்றும் நீர் வசதியினை ஏற்படுத்தித் தருமாறு பாடசலை அதிபர் அலி சப்ரி மற்றும் பெற்றோர்களினால் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்களிடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இவ் நீர் தொகுதி கையளிக்கப்பட்டது

இதுதொடர்பில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபை உப தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டதுடன் அல் ஹித்துமத்துல் உம்மா அமைப்பின் அனுசரனையுடன் இவ் குடிநீர் தொகுதி அமைக்கப்பட்டு சுகாதார வழிமுறையினை பின்பற்றி கையளிக்கப்பட்டது

மேலும் இவ்வாறான குடிநீர் தொகுதி இன்றினை அமைத்துத் தந்தமைக்கு அல் ஹித்துமத்துல் உம்மா அமைப்பின் பணிப்பாளர் பாதிஹ் கஸ்ஸாலி அவர்களுக்கும்

பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உப-தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்களுக்கும் கல்லுரிரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை சார்பாக நன்றியினையும் தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் அலி சப்ரி கல்லூரியின் ஆசிரியர்கள் ஆரம்ப பிரிவு மாணவர்கள்,கிராமசேவையாளர்,அல் ஹித்துமத்துல் உம்மா அமைப்பின் இணைப்பாளர் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# கிண்ணியா வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்கள் சுகயீனப் போராட்டம்



(ஹஸ்பர்)

அரச தாதி உத்தியோகத்தர் சங்கம்.நேற்று வியாழக்கிழமை பல கோரிக்கைகளை முன் வைத்து சுகயீனப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இப்போராட்டத்தில் கிண்ணியா ஆதார வைத்தியசாலை தாதியர்கள், உத்தியோகத்தர்களும் தமது சுகயீனப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.



இதனால் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வந்த நோயாளிகள் பலர் சிரமங்களை எதிர் நோக்கினர்.

# 1 மில்லியன் செலவில் நிருமாணிக்கப்பட்ட வீடு கையளிப்பு







(காரைதீவ நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

புனர் வாழ்வு அமைச்சின் வீடமைப்பு நிர்மாண நிதியின்கீழ் 1 மில்லியன் வீட்டுத்திட்ட வேலை திட்டத்தின் கீழ் நிருமாணிக்கப்பட்ட வீடு நேற்று கையளிக்கப்பட்டது.

வீட்டுத்திட்ட வேலை திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட யு.கொண்சிஸ்ராசெலருக்கான வீடு நிறைவடைந்து காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜனினால் திறந்து வைக்கப்பட்டது.

முறைப்படி சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டி திறந்து வீடு கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பி.சுந்தரலிங்கம் அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.கிருஷ்ணமாலினி ஆகியோரும் கலந்துகொண்டளர்.




# அமைச்சர் டக்ளசுடன் சீனத் தூதுவர் கலந்துரையாடல்
# கடற்றொழிலாளர்களுக்கு 20 மில்லியன் வாழ்வாதார உதவி!






(பைஷல் இஸ்மாயில்)

வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கீ சென் ஹொங், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மைச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த நிலையில், குறித்த சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இலங்கை - சீன கூட்டு முயற்சியான குயிலான் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வருகின்ற கடலட்டை குஞ்சு இனப் பெருக்கப் பண்ணையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்நிலையில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், மக்களுக்கு வளமான எதிர்காலத்தினை பெற்றுத் தரக்கூடிய முதலீடுகளையும் தொழில் நுட்பங்களையும் வரவேற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சீன முதலீட்டு முயற்சிகளை வரவேற்பதாக தெரிவித்தார்.

கடலட்டை பண்ணை முதலீட்டின் ஊடாக ஐந்து மடங்கு இலாபத்தினை பெற்றுக் கொள்ள முடியும் என்பது ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த முதலீட்டின் மூலம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனாவினால் சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஊடாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 13.%5 மில்லியன் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளையும் 6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வலைகளையும் வழங்கி வைத்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவரின் அழைப்பினை ஏற்று, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு உதவித் திட்டங்களை பயனாளர்களுக்கு வழங்கி வைத்தார்.

கொரோனா பரவல் உட்பட பல்வேறு காரணங்களினால் வாழ்வாதார அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவைப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை முன்வைத்த நிலையில், சீனாவினால் முதல் கட்டமாக குறித்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாநகரசபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் மீதான வழக்கில் திருப்பம்?






( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனைமாநகரில் அமைக்கப்பட்டிருந்த வீதிப்பெயர்ப்பலகையொன்றினை உடைத்ததாக த.தே.கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் மீது தொடரப்பட்ட வழக்கில் திருப்பம் ஏற்படலாமென தெரிவிக்கப்படுகிறது.

இவ்வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 2022 பெப்ருவரி மாதம் 9ஆம் திகதிக்கு நீதிவான் சம்சுதீன் ஒத்திவைத்தார்.

கடந்த ஆறு(6)வருடங்களாக இவ்வழக்குவிசாரணை கல்முனை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றுவருகிறது.

இவ்வழக்கின் 34ஆவது தவணை நேற்று முன்தினம்(15) கல்முனை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.சம்சுதீன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அச்சமயம் கல்முனை மாநகரசபையின் கணக்காளர் ஏ.எச்.தஸ்தீக் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். அவர் அதற்கு பூரண தயார்நிலையில் இல்லாமையினால் மேலதிக விசாரணைக்காக வழக்கை எதிர்வரும் 2022 பெப்ருவரி மாதம் 9ஆம் திகதிக்கு நீதிவான் சம்சுதீன் ஒத்திவைத்தார்.

எதிராளி ஹென்றிமகேந்திரன்சார்பில் பிரபல சிரேஸ்டசட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவின் வழிநடாத்தலில் சிரேஸ்ட சட்டத்தரணி என்.சிவரஞ்சித் ,சட்டத்தரணி என் மதிவதனன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

35ஆவது தவணையின்போது எதிர்பாராத திருப்பம் ஏற்டலாமென தெரிவிக்கப்படுகிறது.

# கணேசா மாணவர்களுக்கு கனடாவாழ் உறவுகளால் கல்விக்கான உதவி
# கனடா பிரதிநிதி மதி நேரடி விஜயம்: தவிசாளர் ஜெயசிறிலின் ஏற்பாடு!

( வி.ரி.சகாதேவராஜா)



கல்முனை வலயத்திற்குட்பட்ட சேனைக்குடியிருப்பு கணேசா மகா வித்தியாலய மாணவர்களுக்கு கல்விக்கான ஒருதொகை நிதியை கனடாவாழ் உறவுகள் கையளித்துள்ளன.

இக்கையளிப்புவைபவம் நேற்று பாடசாலை அதிபர் பொன்.கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாட்டை காரைதீவு பிரதேசசபைத்தவிசாளரும், சமுகசெயற்பாட்டாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் மேற்கொண்டிருந்தார்.

பாடசாலை அதிபர் ,ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இதற்கென கனடாவிலிருந்து பிரதிநிதி மதி, இக்கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு மாணவர்க்கான உதவியை கையளித்தார். கூடவே காரைதீவு பிரதேசசபைத்தவிசாளரும், சமுகசெயற்பாட்டாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்துசிறப்பித்தார். பாடசாலை பிரதிஅதிபர் டி.இரவீந்திரகுமார், அருட்சகோ.ஏ.தேவராஜா உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# நாவிதன்வெளி பிரதேச செயலக கலை இலக்கிய விழா-2021







(ஏ.எச்.எம்.ஹாரீஸ், றாசிக் நபாயிஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையில் நாவிதன்வெளி பிரதேச செயலகம் மற்றும் கலை மன்றங்கள் இணைந்து நடாத்தும் பிரதேச கலை இலக்கிய விழா நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தகர் ஏ.எல்.எம்.ஷினாஸின் ஒருங்கிணைப்பில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் சுகாதார வழிமுறைகளுடன் நேற்று நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இக்கலை இலக்கிய விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பதில் மாவட்டச் செயலாளர் வி.ஜெகதீஸன் கலந்து கொண்டதுடன் இலக்கிய அதிதியாக பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான டாக்டர் புஷ்பலதா லோகநாதனும் கலந்து கொண்டனர்.

கலாச்சார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மூத்த கலைஞர்களின் பல நிகழ்வுகள் இடம்பெற்றதோடு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேலும் பங்கு பற்றிய அதிதிகளுக்கும் கலைஞர்களுக்கும் பரிசில்களும், நினைவுச்சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கௌரவ அதிதிகளாக நாவிதன்வெளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் கே.றிஸ்வி யஹ்ஸர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.லதாகரன், நிருவாக உத்தியோகத்தர் கே.யோகேஸ்வரன் மற்றும் விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட செயலக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்சான் அவர்களும் கலந்து கொண்டனர்.

# அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளரின் செயலைக் கண்டித்து லிந்துலையில் போராட்டம்







(க.கிஷாந்தன்)

அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளர், மக்களின் வரிப்பணத்தை முறைகேடாக பயன்படுத்துகிறார் எனவும், பஸ் தரிப்பிடம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வியாபார நோக்கில் கடைகளை அமைக்கின்றார் எனவும் குற்றஞ்சாட்டி, அதற்கு எதிராக தொழிலாளர் தேசிய சங்கத்தின் அக்கரப்பத்தனை பிரதேச சபை உறுப்பினர்களும், பிரதேச மக்களும் நேற்று (16.12.2021) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், இந்த குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்துள்ள பிரதேச சபையின் தவிசாளர் கதிர்ச்செல்வன், மக்களுக்கான பஸ் தரிப்பிடமே அமைக்கப் படுவதாகவும், எஞ்சிய இடத்திலேயே சட்டப்பூர்வமான அனுமதியுடன் மக்கள் நலன் கருதி கடைகள் நிர்மாணிக்கப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

அக்கரபத்தனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு இன்று நடைபெற்ற வேளையிலேயே, லிந்துலை நாகசேனையில் உள்ள சபைக்கு முன்னாள் பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையிலும், சபை தவிசாளரின் செயலைக் கண்டித்தும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் உப தலைவரும், அக்கரப்பத்தனை பிரதேச சபையின் உறுப்பினர் வே.சிவானந்தன், மற்றும் உறுப்பினர் எஸ்.சுதாகர் ஆகிய இருவருமே இவ்வாறு வெளிநடப்பு செய்தனர்.

# யாழ் மாவட்ட செயலகத்தின் வெற்றிக்கு அங்கஜன் எம்.பி வாழ்த்து

(சாவகச்சேரி நிருபர்)



தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் யாழ் மாவட்ட செயலகம் முதலாம் இடத்தினைப் பெற்றதனையிட்டு பாராளுமன்ற உறுப்பினரும்,யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருந்த வாழ்த்துச் செய்தியில்;

அரசதுறை நிறுவனங்களின் வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் 2020ஆம் ஆண்டிற்கான உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ் மாவட்ட செயலகம் முதல் இடத்தைப் பெற்றிருப்பதனையிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அரசாங்க அதிபர் திரு.க.மகேசன் அவர்களினதும் ,மாவட்ட செயலக சகல உத்தியோகத்தர்களினதும் அயராத உழைப்பிற்கு கிடைத்த வெகுமதி இவ் வெற்றியாகும்.

2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொவிட்-19 பரவலின் காரணத்தால் எமது மாவட்டத்திலும் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் சளைக்காமல் உற்பத்தித்திறன் செயற்பாட்டிற்கு அரசாங்க அதிபர் அவர்களினால் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளுக்கும்,வினைத்திறனான செயற்பாட்டிற்குமான சிறந்த தலைமைத்துவத்திற்கு இவ் விருது சான்று பகிர்கின்றது.

அத்துடன் அரச துறையில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரில் யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் 14பிரதேச செயலகங்கள் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளதுடன்-அதில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் முதலாம் இடத்தினைப் பெற்றதனையிட்டும்-ஏனைய பிரதேச செயலகங்களும் சிறப்பான வெற்றியீட்டியதனையிட்டும் மிக்க மகிழ்வடைகிறேன்.

சகல அரச உத்தியோகத்தர்களினதும் சேவைகள் மென்மேலும் தொடர எனது பாராட்டுதல்களும்,வாழ்த்துக்களும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மரண அறிவித்தல்

மண்ணுலகில்
1959
06
30



விண்ணுலகில்
2021
12
16

அமரர்

## வீரக்குட்டி தங்கனாச்சி

**கிண்ணையடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரக்குட்டி தங்கனாச்சி அவர்கள் 16.12.2021 வியாழக்கிழமை இன்று இறைபதம் அடைந்தார்.**

அன்னார் சந்தனப்பிள்ளை, காலஞ்சென்ற வீரக்குட்டி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், தவமணி, யோகராசா, செல்வராசா, சிவராசா, தவலெட்சுமி, தேவமலர், காலஞ்சென்றவர்களான பாக்கியராசா, கந்தசாமி, குணராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாஸ்கரன், விசயா, சாந்தி, சிவாகரன், தேவிகா ஆகியோரின் அன்புத் தாயும், சமிந்த, சத்தியகுமார், நளினி, தியாகராஜா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று, அன்னாரின் பூதவுடல் 16.12.2021 வியாழக்கிழமை பி.ப 05.00 மணியளவில் கிண்ணையடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

AGROMATES 2020

# Remembering



**18th December 2021**
**Saturday**

# Professor S. Raveendranath

Please join us as we honor Prof. Raveendranath on the **FIFTEENTH** anniversary of his passing.

**Toronto/Washington: 6.30 am**
**UK: 11.30 am**
**Netherlands/Norway: 12.30 pm**
**Nairobi: 2.30 pm**
**Sri Lanka: 5.00 pm**
**Sydney/Melbourne: 10.30 pm**
**New Zealand: 12.30 am Sun**

**Zoom Meeting ID**
**824 7236 6202**

Your presence will be very valuable and highly anticipated!